# சந்தேக நிவாரணி
## ப்ரச்னோத்தர வாஹினி

மூலம்
பகவான் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சத்திய சாய் பாபா

தமிழாக்கம்
**என்.கஸ்தூரி,** எம்.ஏ.பி.எல்

# 11. மனமே காரணம்

**பக்தன் :** *சுவாமி ! எனக்கோர் ஐயம்... கேட்கலாமா?*

**சுவாமி :** *நிச்சயமாக, கேட்கலாமா என்று ஏன் தயங்குகிறாய். கேள்.*

**பக்தன் :** *சிலர், பிரஹ்மத்தை "அஸ்தி பாதி பிரியம்" என்று கூறுகின்றனர். அவை பிரஹ்மத்துடன் எத்தகைய தொடர்புடையன, சுவாமி !*

**சுவாமி :** *இதுவா ஐயம்? "அஸ்தி" என்பதன் பொருளாவது "அது எதுவாக இருக்கிறது" என்பது. "அது எதனில் மிளிர்கிறது" என்பதை விளக்குவது "பாதி." நீ அறிவாயே, "பிரியம்" என்பது யாதென்று ! அறியாயோ ? மகிழ்வித்தல், விரும்புதல், திருப்தியாக்குவிக்கும் தகுதி. நீ விரும்பும் இவையெல்லாம் பிரஹ்மம். ஒரு நாயை நீ விரும்பின், அந்த நாயும் பிரஹ்மம். உன்னுடைய பெயரையும் உருவையும், அதனுடைய பெயரையும், உருவையும் நீக்கிவிடின் அங்குத் தனித்திருப்பது பிரஹ்மம். பெயரும், உருவமும் "பூதப் பிரதிபந்தம்" (கடந்த மறைப்புகள்). பெயரும் உருவமும் இன்மையாக இருப்பது பிரஹ்மம். எண்ணிறந்த எல்லா உருவங்களிலும், பெயர்களிலும் வாழ்வது பிரிக்க இயலாத அந்த ஒரே பிரஹ்மந்தான். அதனுடைய இருக்கையை யாவற்றிலும் ஆய்ந்தறிய வேண்டும். அந்த இருப்பு "அஸ்தி," அதனை அறிபவனது அறிவுதான் "பாதி" ஒளி, மிளிரும் ஒளி. அதுவும் பிரஹ்மந்தான். அதனைக் காணவும், உணரவும், அடையவும் ஓர் ஆவல் தோன்றுகிறதல்லவா ? அதற்குக் காரணம் பிரியம், கவர்ச்சி, இனிமை. இவை மூன்றும், என் அன்பு மகனே ! பிரஹ்மத்தின் மூல இலக்கணமாகும்.*

**பக்தன் :** *அவ்வாறாயின் சச்சிதானந்தம் என்றால் என்ன சுவாமி ?*

**சுவாமி :** *அதற்கு உரியபொருள் அச் சொல்லின் கண்ணேயே அமைந்து கிடக்கும் சத்து, சித்து, ஆனந்தம். அதனது இயல்பு அஸ்த்தி-பாதி-பிரியமாக இருப்பதால் அதனைச் சச்சி தானந்தம் என்று கூறுகின்றனர்.*

**பக்தன் :** *அன்புடைமையும் அதனுடைய இயல்பல்லவா? எனவே எல்லாவற்றின் கண்ணும் அன்பு காட்ட வேண்டு மல்லவா? அவ்வாறாயின் தேள், பாம்பு முதலிய கொடிய பிராணிகளிடமும் அன்புகாட்ட வேண்டுமல்லவா ?*

**சுவாமி:** *நீ அவைகளிடம் அன்பில்லாது இருக்கலாம். ஆனால் அவைகள் தங்களுக்குள் ஒன்றை மற்றொன்று விரும்பு கிறதல்லவா ! ஒரு கள்வன், மற்றொரு கள்வனை விரும்புகிறான். ஒரு பக்தன், மற்றொரு பக்தனை விரும்புகிறான். இவ்வாறு ஒவ்வொருவரும் தன்னையொத்தவரை விரும்புகின்றனர்.*

**பக்தன் :** *என்னால் விளக்கமாக அறிந்துகொள்ள முடிய வில்லையே, சுவாமி. "அஸ்தி-பாதி- பிரியம்" இவற்றினை, ஏதாகிலும் இவ்வுலக எடுத்துக் காட்டின்மூலம் விளக்கினால் நன்கு அறிந்துகொள்ள இயலும்.*

**சுவாமி :** *என் அன்பு மகனே, ஏதாகிலும் ஓர் உதாரணம் கூறுங்கள் என்பானேன். எல்லாமே பிரஹ்மமாய் இருக்கும் பொழுது உதாரணத்திற்குப் பஞ்சமேது !*

*நீ ஒரு திரைப்படம் பார்ப்பதாகக் கொள்வோம். திரையின் மீது படம் தெரிகிறது. அப்பொழுது அந்தப் படம் அந்தத் திரையைப் பற்றிக்கொண்டிருக்கிறது. அது "அஸ்தியாகும்." யார் அதனைப் பார்த்து அநுபவிப்பவன் ? நீ யல்லவா ! எனவே பாதிக்கப்பட்ட நீ "பாதி" யாகிறாய். நீ அன்பு காட்டும் பெயரையும் உருவையும் மற்றவைகளுடன் சேர்க்காது தனித்து வைத்திருப் பினும் அவை தோன்றுகின்றன; மறைகின்றன. அந்தத் திரை எப்பொழுதும் அங்கே இருக்கிறது. இங்கு ஒன்றை மட்டும் நன்கு கவனிக்க வேண்டும். இயந்திர அறையின் சுவற்றில் அமைக்கப்*

பட்டுள்ள ஒரு துவாரத்தின் வழியே ஒளிக்கிரணங்கள் ஒரு பூதக்கண்ணாடியின் உதவியினால் செலுத்தப்பட்டு திரையின் மீது படமாகக் காட்டப்படுகிறது. ஆனால் சிறு துவாரத்தின் வழியே அவ்வொளி வெளிவராது முழு அறையினின்றே வருமே யாகில் படத்தைக் காண முடியுமா? அங்ஙனமே இவ்வுலகை சிறு துவாரமாகிய உள்ளத்தின் வழியே காணுங்கால், இவ்வுலகின் பற்பல உருவ அமைப்புக்களைக் காண முடிகிறது. ஆனால் ஆத்மஞானமாகிய பேரொளி வெளிவருமாயின் தனித்தனி உருவங்களைக் காண முடியாது. எனவேதான் எல்லாம் ஒன்றாயமைந்த பிரம்மமாக இருக்கிறது என்று கூறப்படுகிறது.

**பக்தன் :** அதை இப்பொழுது நன்கு அறிந்து கொண்டேன், சுவாமி. இனி தாங்கள் "சென்ற மறைப்பு," "நிகழ் மறைப்பு" என்றால் என்ன என்று கூறி விளக்குங்கள்.

**சுவாமி :** நன்று. சொல்கிறேன். நிகழ் மறைப்பாவன நான்கு: 1. இந்திரிய இன்பத்தின்கண் பற்று, 2. பிறர் குற்றங்காணல், 3. அறிவதில் தளர்ச்சி, 4. அகங்காரம்.

இந்திரியங்களால் பயனுற வேண்டியதைப் பயனுறா வண்ணம் தடுப்பது முதலாவதின் குணம். இரண்டாவதின் குணமாவது ஆசிரியன் கற்பித்தலிலே குற்றங் காணல். மூன்றாவதின் குணம் கற்பிப்பவைகளை அறியும் ஆற்றல் இன்மையினால் குழம்பி நிற்றல். இவ் வுடலையும் புலன்களையும் பிரம்மம் என்னும் தவறான எழுச்சியை எழுப்பும் நானோர் அறிஞன், பண்டிதன், துறவி என்ற அகங்காரத்தை நான்காவது எழுப்பும்.

**பக்தன் :** "எதிர்கால மறைப்பு" சுவாமி ?

**சுவாமி:** அவை தீமையால் தோன்றுபவை. அவை மறைந்து நின்று தடுக்கும்.

**பக்தன் :** அவைகளை எவ்வாறு எதிர்ப்பது, சுவாமி ?

**சுவாமி:** இது யாவருக்கும் இயைந்த தொன்றல்ல. தவறுகளையும் அவைகளின் தோற்றுவாயினையும் பக்தனால் ஓரளவு அறிய இயலும். அது இறைவனிடம்

மன்னிப்பு வேண்டுகின்ற வேட்கையை உண்டு பண்ணும். அதனைக் கொண்டு "எதிர் கால மறைப்பினை" நீ உணர்ந்து கொள்ள வேண்டும். அது இவ்வாறு நிகழும், அதன் தன்மை இத்தகையது என்று ஒருவரது ஒரு பிறப்பைக் கொண்டு முடிவுகட்ட இயலாது. இதனையறிய சிலருக்குப் பல பிறவிகள் எடுக்க வேண்டியும் நேரும்.

**பக்தன்:** அவ்வாறு அறிந்தவர் எவரேனும் உளரோ சுவாமி?

**சுவாமி:** ஏன் எவரேனும் உளரோ என்று கேட்கிறாய். சாஸ்திரங்கள் கூறவில்லையா பரதனைப் பற்றியும் வாசுதேவனைப் பற்றியும். பரதனுக்கு இரண்டு அல்லது மூன்று பிறப்புக்களிருக்க ஒரே ஒரு முறைதான் வாசுதேவன் பிறந்தான்.

**பக்தன்:** எனவே, இம் மறைப்புக்களைக் கடக்கப் பல பிறவிகள் எடுக்க வேண்டும். அவ்வாறு பிறவாது அத்துன்பங் களைப் போக்க இயலாதா, சுவாமி ?

**சுவாமி :** ஏன் இயலாது. பக்தன் இம் மூன்றின் காரணங் களையும் அறிந்து அவற்றால் உண்டாகும் துன்பங்களிலிருந்து தப்புகிறான். அவ்வாறின்றேல் பல பிறவிகள் எடுக்க வேண்டி நேரிடும்.

**பக்தன்:** நிகழ்கால மறைப்பை வெல்லும் வழி யாது சுவாமி?

**சுவாமி :** இதற்கும் ஒரு வழியுள்ளது. அதற்கேற்ற கருமங் களை ஆற்ற வேண்டும். இந்திரிய இச்சைகளின் கண்ணேயுள்ள பற்றினையறுக்க, "சாம, தாம, உபராதி, திதீக்ஷை" யாலும் புனிதத் தன்மை, தன்னடக்கம், ஆசையறுத்தல் முதலியவற்றை வளர்த்துக் கொள்வதாலும், அறியும் ஆற்றலிலேயுள்ள தளர்ச்சியை, அறிந்த ஒன்றினை மேலும் மேலும் எண்ணிப் பார்ப்பதாலும், இடையறாத தியானத்தினாலும், கேள்வி ஞானத்தாலும் குற்றங்காண்டலை அழிக்க இயலும். வீணான அகந்தைகள் யாவும் கற்ற அறிவினைக் கொண்டு ஆய்வதினால் அழியும்.

**பக்தன் :** இவற்றில் யாவரும் தேர்ச்சியுற இயலாதே, சுவாமி! முக்கியமானவற்றைக் கூறி விளக்கின் நலமாயிருக்கும்.

**சுவாமி :** என் அன்பனே ! ஒன்றனையறிய விஞ்ஞானம் வேண்டியதாகிறது. அஞ்ஞானம் ஒருவனை அறிவற்றவனாக ஆக்குகிறது. இதனை அறியாயா ?

**பக்தன் :** விஞ்ஞானத்தைப் பற்றியும், அஞ்ஞானத்தைப் பற்றியும் அநேகர் அநேக வழிகளைக் காட்டுகின்றனர். இவ் விரண்டிற்கும் அடிப்படையாக உள்ளது எது சுவாமி ?

**சுவாமி :** நீ இப்பொழுது முதற் பகுதிக்கு வந்துள்ளாய். புறப் பொருள்களை ஆராய்வது அஞ்ஞானம்; (அகம் மன மென்றும், சித்தமென்றுங் கூறுவர். சக்தியையும், நிலையையும் உள்நோக்கித் திருப்புங்கால், புத்தியென்றும்; அந்த : கரணம் என்றும் கூறப்படுகிறது.)

**பக்தன்:** ஞானிகளுக்கு அமையவேண்டிய குணங்கள் இரண்டு. ஒன்று, ஞானஉலக ஆசை; மற்றொன்று, சென்ற கருமத்தின் சுமையைச் சிந்தித்தல் என்று சிலர் கூறுகின்றனர். இது உண்மையா ?

**சுவாமி :** ஆசையின்மை, மறுவுலகையடையும் ஆவல் சென்ற பிறவியின் சிந்தனை ஆக இம் மூன்றும் சம அளவில் ஞானியும் பெற்றிருப்பர், அஞ்ஞானியும் பெற்றிருப்பர். அநுபவ ஞானமும் சம அளவில் இருக்கும். ஞானிக்கு மாத்திரம் செய்பவன் "தான்" என்ற எண்ணமே இராது. எனவே அவன் பந்தங்களுக்கு உள்ளாகான். ஆனால் அஞ்ஞானிக்குச் செய்பவன் "தான்" என்ற உணர்வு இருக்கும். எனவே இவன் பந்தபாசங்களுக்கு உள்ளாகிறான். இந்த வேற்றுமையை நான் முன்பே கூறவில்லையா ? விடுதலை பெறுவதற்கும், பந்தபாசங்களில் அடங்குவதற்கும் மனம்தான் காரணம் என்று. எனவே நீ நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும், மனமே யாவற்றிற்கும் காரணம் என்று.

**பக்தன் :** மனம், மனமென்று கூறுகிறார்களே, அது என்ன? அதன் அமைப்பு யாது, சுவாமி ?

**சுவாமி :** அறிதல் என்பதுதான் அதன் அமைப்பு. அறிதற் கான அடிப்படை என்ன என்று உணர்ந்து கொண்டால் பந்த பாசமே இராது.

**பக்தன் :** அடிப்படை என்றால் ?

**சுவாமி :** அடிப்படையாவது, "நான்" என்று நீ குறிப்பது. "நான்" என்பது யாது என்று அறிந்து, அறிந்த அந்த நிலையிலே வாழ்வாயாகில், அறிதலை நீ பெற்றாலும், பெறாது போயினும் எவ்வித தாக்குதல்களுக்கும் உள்ளாகமாட்டாய்.

**பக்தன் :** நன்று சுவாமி நன்று. தாங்கள் கூறியயாவையும் என் உள்ளத்தே பதிய ஆசீர்வதித்துச் சென்று வர அநுமதி தாருங்கள்.

**சுவாமி :** மங்கலமுண்டாகட்டும். சென்றுவா !